அ.வ.எண்: 14/2025 நாள்: 22.07.2026

வா.சா.2 –வைரவன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. வழக்கு தாக்கல் செய்துள்ள பெரியசாமி என்பவர் எனக்கு எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால், சுமார் 50 வருடங்களாக பழக்கம். அவர்தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரிதான். பெரியசாமி என்பவருக்கு ராஜு என்ற சகோதரர் உள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. பெரியசாமியின் தகப்பனார் பெயர் என்ன என்றால் சுப்பையா ஆகும். சுப்பையாவிற்கு எத்தனை மனைவிகள் என்றால் 2 மனைவிகள். பெரியசாமியின் தாயார் சுப்பையாவிற்கு எத்தனாவது மனைவி என்றால் முதல் மனைவி ஆவார். சுப்பையாவிற்கும் பெரிய சாமியின் தாயாருக்கும் எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 1951 அல்லது 1953 இல் நடைபெற்று இருக்கும். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால், 1973 ஆம் ஆண்டு பிறந்தேன்.

2. பெரியசாமியின் பெற்றோருக்கு திருமணம் நடைபெற்றது

குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பெரியசாமி என்பவருக்கு ராஜு என்ற சகோதரர் உள்ளார் என்றும், அதனை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் எனக்கு விவரம் தெரிந்த நாள் முதல் அப்படி ஒரு சகோதரர் இருந்ததாக தெரியவில்லை. ராஜு என்ற சகோதரர் இருப்பதை மறைத்து தான் பெரியசாமி வாரிசு சான்றிதழ் கேட்டுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி ராஜு காணாமல் போயிருந்தாலும் அது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் எடுத்திருக்க வேண்டும் என்றும் ஆனால் பெரியசாமி அவ்வாறு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. பெரியசாமி கேட்டுள்ள வாரிசு சான்றிதழ்கான எந்த ஒரு ஆதாரத்தையும் அவர் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மைகளை மறைத்து வாரிசு சான்றிதழ் கேட்டுள்ளதால் 1 முதல் 4 பிரதிவாதிகள் அதை வழங்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. உண்மைகளை மறைத்து நானும் பெரியசாமி கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சி சொல்வதால் 1 முதல் 4 பிரதிவாதிகள் வாரிசு சான்றிதழ் வழங்க மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.07.22 16:35:59 +0530